செம்மண்

நிலம் 3 துகள் 154 வள்ளுவர் ஆண்டு 2052, 01 - 07 ஆடி 2023 வாரமலர் பக்கங்கள் 20



# இலவசம் ஏற்படுத்திய கலவரம்

இஷாமேரி

**இந்தப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் பல முறைகேடுகள் நடந்திருப்பதால் உதவிக்குத் தகுதியானவர்கள் இருக்க அவர்களை விடவும் வசதியானவர்கள் இடம்பிடித்துவிட்டமை பாதிக்கப்பட்ட மக்களைக் கொந்தளிக்க வைத்துள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள பயனாளிகள் பட்டியல் பிரச்சினை தொடர்பில் ஏறத்தாழ 4லட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன**

இலவசமாகக் கொடுத்தால் தமிழ்ப் பத்திரிகையையும் சிங்களவர் வாங்குவார்கள் என்று சிங்களத்தில் ஒரு வாசகமுண்டு. இது தமிழருக்கும் பொருந்தும். வாசிக்கத் தெரியாவிட்டாலும் இலவசமாகச் சிங்களப் பத்திரிகையைக் கொடுத்தால் தமிழரும் வாங்குவார்கள். அண்மையில் அரசு நடைமுறைக்கிட்டிருக்கின்ற "அஸ்வேசும" (ஆறுதல்) என்கிற வேலைத்திட்டம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிற எதிர்வினைகளில் இருந்து இதைத் தெளிவாக அறிய முடிகிறது.

பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட, நலிவடைந்த மக்களுக்கே இந்தத் திட்டத்தின் கீழான நிதியுதவிகள் கிடைக்க வேண்டும். வசதியானவர்களில் சிலர் ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய வரப்பிரசாதங்களைத் தட்டிப் பறிக்க முயன்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றிக் கண்ணீருடன் களத்தில் இறங்கி நியாயம் கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் பல பிரதேசங்களில் இந்தத் எதிர்ப்புப் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் அரங்கேறி வருகின்றன.

**அஸ்வேசும (ஆறுதல்) என்பது...?**

பிரதேசமொன்றில் காணப்படுகின்ற மக்கள் கூட்டத்தை வறிய, மிக வறிய, இடைநிலை, எதிர்காலத்தில் பாதிக்கப்படக்கூடியவர்கள் என

4 பிரிவுகளில் வகைப்படுத்தி அவர்களுக்கு நிதியுதவி வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். அங்கவீனர்கள், முதியவர்கள், சிறுநீரக நோயாளர்கள், ஆகியோரும் இந்தத் திட்டத்தின் கீழ் நன்மையடைவர். இதன்படி எதிர்காலத்தில் பாதிக்கப்படக்கூடிய 4லட்சம் பேருக்கு 2024 ஜுலை 31 வரை மாதாந்தம் 5ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வறியவர்கள் என்ற அடிப்படையில் 8 லட்சம் பேருக்கு மாதாந்தம் 8ஆயிரத்து 500 ரூபாவையும் மிக வறுமைப்பட்டவர்களுக்கு மாதாந்தம் 15ஆயிரம் ரூபாவையும் 2023 ஜுலை முதலாம் திகதியிலிருந்து 3வருடங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் இடைநிலைப் பிரிவினரில் 4லட்சம் பேருக்கு இந்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதி வரை 2ஆயிரத்து 500 ரூபாயை மாதாந்தக் கொடுப்பனவாகவும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை தற்போது நலன்புரி நன்மைகளைப் பெறும் 72ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 5ஆயிரம் ரூபா வீதமும் சிறுநீரகப் பாதிப்புக்குள்ளாகி



யிருக்கும் 39ஆயிரத்து 150பேருக்கு 5ஆயிரம் ரூபா வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளைப் பெறுகின்ற 4இலட்சத்து 16ஆயிரத்து 667 பேருக்கு மாதாந்தம் 2ஆயிரம் ரூபா என்ற அடிப்படையிலும் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் பல முறைகேடுகள் நடந்திருப்பதால் உதவிக்குத் தகுதியானவர்கள் இருக்க அவர்களை விடவும் வசதியானவர்கள் இடம்பிடித்துவிட்டமை பாதிக்கப்பட்ட மக்களைக் கொந்தளிக்க வைத்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள பயனாளிகள் பட்டியல் பிரச்சினை தொடர்பில் ஏறத்தாழ 4லட்சம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும் நாடு முழுதும் 340 பிரதேச செயலகங்கள் ஊடாக மூவர் கொண்ட குழு ஒன்றை அமைத்து அதைச் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**தொழில்நுட்ப வசதியற்ற வறியவர்கள்**

அஸ்வேசும திட்டத்துக்கான பயனாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை கியு ஆர் குறியீட்டின் மூலம் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டதால் தகவல் தொழில்நுட்ப அறிவுள்ளவர்கள் வேகமாகத் தம்மைப் பட்டியலில் செருகி விட்டனர். இவர்கள் அடிப்படையிலேயே வசதி படைத்தவர்களாக இருந்தனர். ஆனால், ஏழை மக்களிடம் அதைச் சாத்தியப்படுத்தக்கூடிய கைபேசி வசதியோ, அது குறித்த தொழில்நுட்ப அறிவோ இருக்கவில்லை. அதனாலேயே இந்தத் திட்டத்துக்குள் வசதியானவர்களும் உள்வாங்கப்பட்டு ஏழைகள் நிராகரிக்கப்பட்;ட முறைகேடுகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று தற்போது சாட்டுக் கூறப்படுகிறது.

**பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு தெரிவு செய்வது...?**

மக்களுக்காக திட்டம் ஒன்றை வகுக்கும்போது அதற்குத் தகுதியானவர்களைத்த தெரிவு செய்வதற்குரிய வழிவகைகளைச் சரியாக வகுக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களை அடையாளம் காண்பதில் ஏற்பட்ட முறைகேடே மக்கள் போராட்டத்துக்கு வித்திட்டுள்ளது. மக்களைப் பொருளாதார ரீதியில் வகைப்படுத்தித் தரப்படுத்தும் ஆற்றலும் அறிவும் திட்ட வகுப்பும் அரசின் கைவசம் இல்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இந்த இலவசமான கொடுப்பனவைப் பெறத் தகுதியில்லாத வசதி படைத்தவர்கள் தமக்கும் நிவாரணம் தரப்பட வேண்டும் என முண்டியடித்துக்கொண்டு நிற்பதால் பாரிய நிர்வாக முறைகேடு ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தலை மையப்படுத்தி அரசியல் தலையீடுகளும், அரச ஊழியர்களின் முறைகேடுகளும் எனப் பல விடயங்கள் இதில் கலந்துள்ளதால் இலங்கையில் அறம், நேர்மை, சட்டத்தை மதிக்கும், தன்மை பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற மனிதாபிமான எண்ணம் எல்லாமே கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இத்தகைய குறைபாடுகள் இருக்கும் வரை பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பின்னடைவான சூழலுக்குள் தள்ளப்படவே வாய்ப்புண்டு,

இந்த அஸ்வேசும போலவே சமுர்த்திப் பயனாளிகள் தெரிவிலும் பல முறைகேடுகள் இருந்தன. யாழ்ப்பாணத்தில் சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு 3 பான்சிக் கடைகள் இருந்தன. அங்கு பணியாற்றி, அந்தக் கடையில் சம்பளம் பெறுபவர்களுக்குச் சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கபப்படவில்லை. பின்னர் இந்த விடயம் உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சீர் செய்யப்பட்டது.

இதுபோன்ற பாரபட்சமான நிலையே அஸ்வேசும விடயத்திலும் ஏற்பட்டுள்ளது. தமது வருமானத்தை ஏய்ப்புச் செய்து அல்லது மறைத்து, குறைத்துக்காட்டி முறைகேடாக இந்தக் கொடுப்பனவைப் பெற முயன்றவர்களுடைய பெயர் பட்டியலை வெளியிடுவதன் மூலம் சமூகத்தில் தம்மைப் பிரமுகர்களாகவும் முக்கிய நபர்களாகவும் காட்டிக் கொள்ளும் பலரை வெளிக்கட்ட முடியும்.

# "5ஆயிரம் சிப்பாய்கள் சாவடைவர்கள் என்று எதிர்பார்த்தோம்"



மொழியாக்கம்
கமலநாதன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

புலிகளுடன் நேரடியாக மோதல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து அவர்களின் மையங்களை நோக்கி எறிகணைகளை வீசி அவர்களைக் கொல்வதில் அக்கறை காட்டப்பட்டது. இதில் ஜெயந்த டயஸ், சவேந்திர சில்வா ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டார்கள். இதன் மூலம் தினமும் புலிகளின் எண்ணிக்கை எல்லா முனைகளிலும் குறைக்கப்பட்டது.


ஜெயந்த டயஸ் தலைமையிலான அணி கிளிநொச்சியைக் கைப்பற்றியதும் பூநகரி, முகமாலைப் பகுதிகளில் இருந்து புலிகள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இறுதிப் போரை நோக்கிய நகர்வில் நாம் கிளிநொச்சியைக் கைப்பற்றியது என்பது ஒரு முக்கியமான திருப்புமுனையாகும். எமது நகர்வுகளில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் செயற்படவேண்டியதும் ஒரு கடப்பாடாக இருந்தது. அதில் அதிக கவனம் செலுத்தி வந்தோம். மக்களைப் பாதுகாத்துத் தாக்குதல்களை மேற்கொண்டோம். இறுதிப் போர் நடவடிக்கையின்போது 5ஆயிரம் படைச் சிப்பாய்கள் சாவடைவார்கள் எனச் சரத்பொன்சேகா ஏற்கனவே திட்டமிட்டிருந்தார்.

**55ஆவது படையணியின் நகர்வு**

55ஆவது படைப்பிரிவு முகமாலையிலிருந்து நந்திக்கடல் நோக்கிய பயணத்தை ஆரம்பித்தது. இந்தப் படை நகர்வு கிழக்குக் கடற்கரை ஓரமாக மேற்கொள்ளப்பட்டது. தை, மாசி, பங்குனி மாதங்களில் இந்தக் கடற்கரை மணல் அதிக சூடாக இருக்கும். அதிக வெப்பச் சூழலில் அது பாலைவனம்போல இருந்தது.

இந்த நகர்வில் நாம் சந்தித்ததெல்லாம் கடற்புலிகளின் முகாம்களையே. அவை எல்லாமே சூசையின் முகாம்கள். பல இடங்கள் சதுப்பு நிலங்களாக இருந்ததால் பிளாஸ்ரிக் படகுகளைக் கவிழ்த்துப்போட்டு அவற்றை வைத்துத் தற்காலிக பாலம் அமைத்து டிரக்ரர், ட்ரக்குகள், சிறிய ஆட்லறிகள், மோட்டார்களை நகர்த்த வேண்டியிருந்தது. இவை






எல்லாவற்றையும் இரவிலேயே செய்தோம்.

சுண்டிக்குளம் பகுதியில் மக்கள் இருக்கவில்லை. அந்தப் பகுதி மிகவும் அழகானது. பறவைகள் அதிகமுள்ள ஓர் இடம். இந்தப் படை நடவடிக்கையில் பிரசன்ன சில்வா அதிக திட்டங்களை வகுத்துச் செயற்பட்டார். நாம் நிற்கும் இடத்திலிருந்து புலிகளின் பங்கர் வரை மணலில் கான் வெட்டிச் சென்று புலிகளின் முகாமுக்குள் என்ன நடக்கிறது என்பதைத் தானே வேவு பார்த்து வருவார். கட்டையான உருவமுடையவர் என்பதால் மிக நுட்பமாக அவற்றைச் செய்வார். நான் உயரமான தோற்றமுடையவன் என்பதால் என்னைத் தன்னுடன் அழைத்துச் செல்ல மாட்டார். அவர் படைச் சிப்பாய்களுக்குக் கொடுத்த உற்சாகத்தால் முன்னரங்க நிலைகளில் போராடும்போது ஒருவர் இறந்துவிட்டால் அங்கு நிற்கிற மற்றவர் தலைமை தாங்கிப் போரிடுவார். நாம் முன்னேறிய பகுதிகளை விட்டுப் பின்வாங்காது செயற்பட்டோம்.

**கேணல் ரட்ணாயக்க, கமல் குணரட்ண ஆகியோர் கூட நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்ற படை நடவடிக்கையின்போது புலிகளின் கடுமையான தாக்குதலால் ஒரு நாள் முழுதம் பதுங்கு குழிக்குள் அகப்பட்டிருந்த சம்பவங்களும் நடந்தன. அவர்களை மீட்பதற்காகப் போராட வேண்டிய நிலைகூடப் படையினருக்கு ஏற்பட்டது.**

**இரவு வருவோர் காலையில் களத்தில்...**

முதல் நாள் இரவு கப்பல் மூலம் திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைத் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்படும் படையினர் ஒரு நாள்கூட ஓய்வெடுக்காமல் மறுநாள் காலையில் போர் முனைக்குக் கொண்டுவரப்படுவார்கள். அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்களில் சிலர் களத்தில் இறங்கிய ஒரு சில நிமிடங்களில் காயப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட சம்பவங்களும் நடந்தன. கேணல் ரட்ணாயக்க, கமல் குணரட்ண ஆகியோர் கூட நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்ற படை நடவடிக்கையின் போது புலிகளின் கடுமையான தாக்குதலால் ஒரு நாள் முழுதம் பதுங்கு குழிக்குள் அகப்பட்டிருந்த சம்பவங்களும் நடந்தன. அவர்களை மீட்பதற்காகப் போராட வேண்டிய நிலைகூடப் படையினருக்கு ஏற்பட்டது.



**உணவுப் பிரச்சினை**

கிழக்குக் கடற்கரையோரமாக இடம்பெற்ற தொடர் தாக்குதல்கள் காரமணாகப் படையினருக்கான உணவு வழங்கலில் பெரிய பிரச்சினை ஏற்பட்டது. பருப்பு, ரின் மீன், நெத்தலி ஆகியவற்றை ஆங்காங்கே களஞ்சியப்படுத்தி வைத்து உணவு தயாரிக்கும் நிலை ஏற்பட்டது. போரில் மாத்திரம் குறியாக இருந்ததால் ஏனைய விடயங்களைக் கவனிப்பதில் சிரமங்கள் இருந்தன.



தர்மராசா

சிறைக்குள்...

115

## "நீங்கள் விடுதலை செய்யப்படுகிறீர்கள்...!!!"

22.7.2002 அன்று காலை களுத்துறைச் சிறைச்சாலையில் மழை பெய்து கொண்டிருந்தது. கைதிகளில் சிலர் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்கள். அவர்கள் படும் எல்லாத் துன்பங்களையும் பார்த்துக் கொண்டு எனது வழக்கு விசாரணைக்காகக் கொழும்பு நீதிமன்றத்துக்குச் செல்லத் தயாரானேன். மரினோ அன்று விடுதலையாகவிருந்தான். அவனது பை ஒன்றையும் தண்ணீர்ப் போத்தலையும் எடுத்துக்கொண்டு நான் நடந்தேன். வழக்குப் பற்றிய கோவைகளைப் புரட்டிப் பார்த்த உடவத்த என்ற ஜெயிலர், "இவருக்கு இன்னோர் வழக்குண்டு. திரும்பக் கொண்டுவர வேண்டும்" என்று எங்களை அழைத்துச் செல்லும் அன்றைய எஸ்கொட்டுக்குப் பொறுப்பான அதிகாரியிடம் கூறினார். அது ஒன்றும் புதினமான விடயமல்ல.

காலை 9.30மணியளவில் கொழும்பு இரண்டாவது நீதிமன்றில் எனது வழக்கு விசாரணைக்குக் கூப்பிடப்பட்டது. என் சார்பாகச் சட்டத்தரணி மரியாம்பிள்ளை நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். திருகோணமலை நீதிமன்றத்தால் எனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாக வைத்துக் கொழும்பு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கைத் திரும்பப் பெறுகிறோம் என்று நீதிபதிக்கு அரச தரப்புச் சட்டத்தரணி அறிவித்தார். நான் அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுகிறேன் என்று நீதிபதி உடனேயே அறிவித்தார்.

அந்தத் தருணம் பெருமளவு பாரம் குறைந்து உடல் சருகாவதுபோல உணர்ந்தேன். "இவருக்கு வேறு வழக்குண்டா?" என்று நீதிபதி என் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியிடம் கேட்டார். கொழும்பு மூன்றாவது நீதிமன்றில் ஒரு வழக்கு உண்டு" என்றார் சட்டத்தரணி. அங்கு கொண்டுசென்று முன்னிலைப் படுத்துமாறு சிறைச்சாலை ஊழியருக்கு நீதிபதி உத்தரவிட்டார். (அந்த நீதிமன்று அதே கட்டடத் தொகுதியில் தான் இருந்தது) அதன்பின்புதான் எனக்குத்

தெரியும் மூன்றாவது நீதிமன்றில் 2002ஆம் ஆண்டு 9ஆம் மாதத்துக்குத் தவணையிடப்பட்ட வழக்கும் அன்றைய தினமே (22.7.2002) விசாரணைக்கு எடுக்கப்படுகிறது என்று. அந்த நீதிமன்ற விசாரணை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் என்பதால் அதுவரை சிறைச்சாலைப் பேருந்துக்குள் என்னை விலங்கிட்டு வைத்திருந்தார்கள். மனம் நிம்மதியாக இருந்தது. உண்ணவோ, நீர் அருந்தவோ, மூச்சு விடவோ மறந்த ஒரு நிலையை உணர்ந்தேன். உடலுக்கும் உணர்வுக்கும் உள்ள தொடர்பை அன்றுதான் முழுமையாகப் புரிந்துகொண்டேன்.

**நீதிமன்றக் காவலர் ஓடிவந்து எனது கையைப் பிடித்து இழுத்து மறுபுறம் இருந்த வாசலைக் காட்டி ''நீதிமன்ற வளாகத்தை விட்டு உடனடியாக வெளியேறுங்கள்'' என்று சிங்களத்தில் கூறினார். நான் இவ்வாறு வலுக்கட்டாயமாகத் துரத்தப்படுவேன் என்று நினைக்கவேயில்லை.**

பிற்பகல் 1.15 மணியளவில் பேருந்திலிருந்து இறக்கப்பட்டு அருகிலிருந்த 3ஆவது நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். கைவிலங்கு கழற்றப்பட்டது. சிறைச்சாலை ஊழியர் ஒருவர் என்னுடன் கதைத்துக்கொண்டிருந்தார். நாட்டில் சமாதானச் சூழல் நிலவும் நிலையில் சுதந்திரமாக இருக்கவேண்டும் என்று வாழ்த்துவதுபோல கேட்டுக்கொண்டார். எனது சொந்த வாழ்க்கை பற்றி விசாரித்தார். கவலையும்பட்டார்.

பிற்பகல் 1.45மணியளவில் நீதிபதி தனது இருக்கைக்கு வந்தார். இரண்டாவது வழக்காக எனது வழக்கு விசாரணைக்கு வந்தது. நான் குற்றவாளிக் கூண்டில் ஏறி நின்றேன். என் மீதான அந்த வழக்கைத் திரும்பப் பெறுகிறேன் என்று நீதிபதிக்கு அரச தரப்புச் சட்டத்தரணி கூறினார். நீதிபதி உடனடியாக ஏதோ எழுதிக் கோவையை ஓரமாக வைத்தார். ''நீங்கள் விடுதலை செய்யப்படுகிறீர்கள்'' என்றார்.

நான் கூண்டைவிட்டுக் கீழே இறங்கியபோது என்னுடன் கதைத்துக்கொண்டிருந்த சிறைச்சாலை ஊழியர் என்னை அழைத்துச் செல்வதற்கு ஆயத்தமாகி எனக்குப் பின்னால் வந்தார். நீதிபதி அவரிடம் கேட்டார், ''நீ எங்கே போகிறாய் அவருடன்?'' என்று. அதற்கு அந்த ஊழியர், ''இவருக்குக் கால வரையறையற்ற தடுப்புக் காவல் உத்தரவு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்'' என்றார். உடனே நீதிபதி, ''உன்னை இப்ப சிறையில் போடுவேன். அவரை விடுவித்ததற்குரிய எழுத்துமூலக் கடிதத்தை நீதிமன்ற அலுவலகத்தில் போய் எடுத்துக் கொண்டு போ'' என்று கடும் தொனியில் பேசினார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீதிமன்றக் காவலர் ஓடிவந்து எனது கையைப் பிடித்து இழுத்து மறுபுறம் இருந்த வாசலைக் காட்டி ''நீதிமன்ற வளாகத்தை விட்டு உடனடியாக வெளியேறுங்கள்'' என்று சிங்களத்தில் கூறினார். நான் இவ்வாறு வலுக்கட்டாயமாகத் துரத்தப்படுவேன் என்று நினைக்கவேயில்லை. ஏற்கனவே மட்டக்களப்பில் மகாலிங்கம் ஐயா கூறியதுபோல சிறைக்குள்ளிருந்த காலம் முடிந்து விட்டதுபோல என்று நினைத்தேன். என்னைப் பார்க்க மாமாவும் அத்தானும் வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் எனது இருபக்கமாக அருகில் வந்து எனது இரு கைகளையும் பற்றிக் கொண்டார்கள். எனது விடுதலை நேரத்தில் எனது விடயத்தில் நீதிபதியிடம் பேச்சு வாங்கிய சிறைச்சாலை ஊழியர் பயந்து நடுங்கிய விடயம் இன்றும் எனக்கு ஞாபகத்தில் நிற்கிறது. நிமல் ஆரியவங்க என்ற அந்த ஊழியருக்காக என் மனம் எப்போதும் கழிவிரக்கத்தில் இருக்கும். அந்த ஊழியர் துவேசமாக இருந்திருந்தால் நீதிபதி பேசியது சரிதான் என்ற மனநிலை எனக்கு இருந்திருக்கக்கூடும். ஆனால் அவர் ஓர் அப்பாவிச் சிங்கள மனிதன். அதனால்தான் அந்த விடயம் மனதைக் குடைகிறது.

எனது சந்ததியில் சிறைக்குச் சென்ற முதல் நபர் நான் தான். எனது இந்தச் சிறைத்துன்பமே எனது சந்ததியின் இறுதித் துன்பமாகவும் இருந்துவிட வேண்டும். இதுவே நான் சிறையில் இரண்டு வருடங்களைக் கழித்த கொடுமையிலிருந்து இருந்து பெற்ற படிப்பினையாகும்.



(நிறைவு)

# இந்த வாரச் சொல்

## சில்லெடுப்பு

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் ''சில்லெடுப்பு'' என்கிற சொல் பல இடங்களில் பாவிக்கப்படுகிறது. சிக்கலான விடயத்தையோ, காரியத்தையோ, பணியையோ, வேலையையோ குறிப்பது அல்லது பல தடவைகள் முயன்றும் ஒரு விடயத்தை நிறைவேற்றாதிருப்பது, கடினப்பட்டு நிறைவேற்றுவது எனப் பல அர்த்தங்களில் இது பாவிக்கப்படுகிறது. இத்தகைய ''சில்லெடுப்பு'' ஒரு வினைச் சொல் பாரம் ஏற்றிய வண்டிலின் சில்லுகள் மணற்பாங்கான அல்லது சேற்றுப் பகுதிக்குள் சிக்கி விட்டால் அதை வெளியில் எடுப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. அந்த வண்டிலில் ஏற்றிய கிடுகு அல்லது மூடைகள், பொருள்களை அதிலிருந்து கீழே இறக்கிவிட்டுத்தான் வண்டிலை வெளியே எடுக்க வேண்டியிருக்கும். வண்டிலை மீட்டெடுத்த பின்னர் அதிலிருந்து இறக்கிய பொருள்களை மீளவும் அதில் ஏற்றிக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றிக்கொண்டு பயணத்தைத் தொடர்வதையே ''சில்லெடுப்பு - சில்லெடுத்த வேலை'' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அது சார்ந்த சர்ந்தப்பங்கள், நிகழ்ச்சிகளைச் சுட்டும் ஒரு வழக்காறுச் சொல்லாகப் பிற்காலத்தில் இந்தச் சில்லெடுப்பு என்கிற சொல் புழக்கத்துக்கு வந்துவிட்டது.

''அந்த இடத்துக்கு வேலைக்குப் போனால் சில்லெடுப்புத்தான்''

''இது ஒரு சில்லெடுத்த வேலை''

''அவங்களோட என்ன வேலைக்குப் போனாலும் சில்லெடுப்பிலதான் போய் முடியும்''

''அவளோட சேர்ந்தால் பெரிய சில்லெடுப்பாய்த்தான் இருக்கும்''

# மரக் களவாணிகள்...?



பிருந்தா கனகேஷ்

வீட்டுக்கு அருகில் பெருமெடுப்பில் வளர்ந்து நிற்கிற மா, பலா, பனை, தென்னை ஆகிய மரங்களால் வீட்டுக்கு ஆபத்து நேர்ந்துவிடும் என்ற அச்சத்தில் பயன்தருபவையாக இருந்தாலும் அவற்றை வெட்ட வேண்டிய கட்டாயம் பல வீட்டுக்காரர்களுக்கு ஏற்படுவதுண்டு. இவ்வாறாக நல்ல பயன்தரும் மரங்களை விருப்பமின்றிப் பலர் வெட்டவும் செய்கின்றனர். இந்த இக்கட்டான சூழலை நன்கு விளங்கியிருக்கும் மரம் வெட்டுபவர்கள் தமக்குச் சாதகமாகக் கதை சொல்லிப் பெறுமதியான மரங்களை இலவசமாக வாங்குவதுடன் வீட்டுக்காரரிடமிருந்து அதற்கான பணத்தையும்கூட வாங்கிவிடுகின்றனர். இந்த நிலை யாழ்ப்பாணத்தில் தான் அதிகம் காணப்படுகிறது.

**நீலிக் கண்ணீர்**

வீட்டுக்காரர் வெட்ட விரும்பும் மரமானது

வீட்டுப் பக்கமாகச் சற்றுச் சாய்ந்து நின்றால் அதை விலை தீர்த்து வாங்க வருபவருக்கு அது அதிக வாய்;ப்பாக அமையும். அந்த மரம் வீழ்ந்தால் வீட்டுக்குப் பெரும் ஆபத்தாகிவிடும் என வீட்டுக்காரர் நினைப்பதைவிட - கவலைப்படுவதைவிட வந்து பார்க்கும் மரம் வெட்டுபவர் அதிகம் கவலைப்படுவார் - நீலிக்கண்ணீர் வடிப்பர். ''ஐயோ இந்த மரத்தை எப்பவோ வெட்டியிருக்கவேணும். இப்ப இது விழுந்தால் வீட்டைத் திருத்தப் பல லட்சம் தேவை'' என்று நெத்தியடி அடிப்பார். ''இந்த மரத்தை ஒவ்வொரு கொப்பாக வெட்டிப் பத்திரமாக இறக்கவேணும். ஒவ்வொரு கொப்பாகக் கயிறுபோட்டு இறக்குறது கஸ்ரம். அதற்கு நாலு பேராவது வேணும். அதற்கு அதிக செலவாகும். இந்த மரத்தை வெட்டி எடுப்பதால் எங்களுக்குத்தான் நட்டம். நீங்கள் வெறு யாரிடமாவது கேட்டு வெட்டுங்கோ'' என்று கூறியதும் வீட்டுக்காரர் மேலும் பயப்பிடுகின்றனர்.

''வெட்டும்போது தற்செயலாக ஒரு கொப்புத் தவறி வீட்டில் விழுந்து விட்டால் எங்களுக்குத்தான் பிரச்சினை'' என்றும் கூறுகின்றனர். இத்தகைய வெருட்டல் கதைகளால் வீட்டுக்காரர் அதிகம் பயந்து, ''தம்பி உதை எப்படியாவது வெட்டித்தாங்கோ'' என்று தமது கையறு நிலையை வெளிக்காட்டியதும் தனது வலையில் இவர்கள் இலகுவாக விழுந்து விட்டனர் என்பது மரம் வெட்ட வந்தவருக்குப் புரிந்து விடுகிறது. அதன் பின்னர் மரம் வெட்டுபவர் தனது ஆட்டத்தை ஆரம்பிப்பார்.

**விலை குறைக்கும் தந்திரம்**

''உந்த மரம் இப்ப எங்களுக்குத் தேவையில்ல. ஏற்கனவே வெட்டிய மரங்கள் கனக்க விற்காமல் கிடக்கு. உங்களுக்கு அவசரம் என்றால், வெட்டி விழுத்துறம். அதற்குப் பத்தாயிரம் ரூபா தந்தால் வெட்டிவிடுறம்'' என்று சொல்ல, ''ஐயோ தம்பி எங்கட இந்தச் சின்னக் காணிக்குள்ள மரத்தையும் கிளைகளையும் குழைகளையும் போட இடமில்ல. இதை வெட்டி எப்படியாவது ஏத்திக் கொண்டு போங்கோ'' என்று வீட்டுக்காரர் மன்றாடுகின்றனர். வெளியே தெரியாத சிரிப்பும், தந்திர வெற்றிக்களிப்பும் மரம் வெட்டுபவருக்கு ஏற்பட்டுப் பணச் செலவில்லாமல் மரத்தைச் சொந்தமாக்கும் நிலையை அவர் அடைகிறார்.

ஆணுதவி இல்லாத பல வீடுகளில் இத்தகைய தீர்மானங்களைப் பெண்களே எடுக்கின்றனர். அவர்களுக்குப் பலா மரப் பலகையோ, மாமரப் பலகையோ ஒரு சதுர அடி என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்பதோ ஒரு தூக்கு விறகு என்ன விலை என்றோ தெரிந்திருப்பதில்லை. வீட்டுக்கு ஆபத்தில்லாமல் மரத்தை வெட்டி ஏற்றினாலே போதும் என்ற நிலையே அவர்களிடம் இருக்கிறது.

இத்தகைய நிலையில் மரம் வெட்டுபவருக்கு அடிப்பகுதி மரத்தால் பல ஆயிரம் ரூபாய்களும் கிளைகளை விறகுக்கு எடுப்பதால் அதன் மூலம் பல ஆயிரம் ரூபாய்களும் கிடைக்கின்றன அதேவேளை வீட்டுக்காரிடமிருந்தும் பத்து அல்லது பதினைந்து ஆயிரம் ரூபாய்களைக் கறந்துவிடுகின்றனர். இந்த விடயத்தில் இன்னோர் நடைமுறையும் யாழ்ப்பாணத்தில் உண்டு. குறிப்பிட்ட ஒரு மரத்தைக் காட்டி, ''இந்த மரத்தை என்ன விலைக்கு வாங்குவாய்?'' என்று கேட்டால், இந்த மரத்தை தறிக்க ஏலாது என்று கூறுகிறார்கள். ''இந்த மரத்தை நாங்கள் தறித்துத் தருகிறோம் மரத்துக்கு எவ்வளவு தருவாய்?'' என்று கேட்டால், ''நீங்கள் மரத்தைத் தறிச்சுப் போட்டுச் சொல்லுங்கோ நாங்கள் வந்து பார்த்து விலை சொல்கிறோம். மரத்தை வீழ்த்தினால்தான் பெறுமதி சொல்ல முடியும்'' என்பார்கள். மரத் தைத் தறித்து வீழ்த்திய பின் அவர் கள் கூறும் விலைக்கே மரத்தை விற்க வேண்டிய நிலை தமக்கு ஏற் படும் என்பதை மரச் சொந்தக்காரர் புரிந்திருப்பதில்லை. ஒரு மரத்தின் சுற்றளவு மற்றும் உயரத்தை வைத்து அதில் எத்தனை சதுர அடி பலகை மற்றும் விறகுகளைப் பெறலாம் என்று கணித்துவிட முடியும். அதைத் தவிர்த்து மரத்தை வீழ்த் துமாறு கூறுவது மிகக் குறைந்த விலையில் மரத்தை வாங்குவதற்கான சுத்துமாத்தேயாகும்.

வீட்டின் மீது மரம் விழுந்தால் அதைத் திருத்தியெடுக்கவும் சீரமைக்கவும் இந்தக் காலத்தில பொருளுகள் விற்கிற விலைக்கு இத்தனை லட்சம் செலவாகும் என்ற பயத்தை வீட்டுக்காரருக்கு ஏற்படுத்தி மரம் வெட்டுபவர்கள் மரத்தையும் பணத்தையும் பிடுங்கிச் செல்லும் மோசடி யாழ்ப்பாணத்தில் பரவலாக நடக்கிறது. மக்கள் இது விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும். பல இடங்களில் விசாரித்து அதற்கான தகுந்த விலையைத் தீர்மானிக்க வேண்டும். ஏற்கனவே வேறு எங்காவது மரம் வெட்டி அதற்கு நல்ல விலை கொடுத்து வாங்கிய நபர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு விற்ற முடியும். இது விடயத்தில் மக்களே விழிப்பாக இருக்க வேண்டும். அல்லதுபோனால் ஏமாற்றுக்காரர்களின் காட்டில் அடை மழையாகத்தான் இருக்கும்.

**வீட்டின் மீது மரம் விழுந்தால் அதைத் திருத்தியெடுக்கவும் சீரமைக்கவும் இந்தக் காலத்தில பொருளுகள் விற்கிற விலைக்கு இத்தனை லட்சம் செலவாகும் என்ற பயத்தை வீட்டுக்காரருக்கு ஏற்படுத்தி மரம் வெட்டுபவர்கள் மரத்தையும் பணத்தையும் பிடுங்கிச் செல்லும் மோசடி யாழ்ப்பாணத்தில் பரவலாக நடக்கிறது.**

# கல்வி மட்டும் பிள்ளை வளர்ப்பல்ல...!

விதுர்ஷன்

சமூகத்தில் ஒரு சிலர் முரடர்களாகவும், சமூக ஒழுக்க விதிகளுக்கு மாறாகச் செயற்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறானவர்களே பெரும்பாலும் நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டுச் சிறைகளில் வாடுகின்றனர். இவ்வாறான குற்றவியல் கைதிகளின் குடும்பச் சூழலை ஆராய்ந்தால் அவர்களின் சிறுவயது வாழ்க்கையில் பல சீர்கேடுகள் மற்றும் பெற்றோரின் அரவணைப்பின்மை, கவனிப்பின்மை எனப் பல காரணங்களைக் கண்டுகொள்ள முடியும்.

**அரவணைப்பில்லாத பிள்ளைகள்**

செல்வந்தர்களின் பிள்ளைகள், வறுமையில் வாடுகின்ற குடும்பத்துப் பிள்ளைகள் எனப் பல ரகத்தில் அரவணைப்பில்லாத பிள்ளைகள் இருப்பதைக் காணலாம். இதிலிருந்து பிள்ளைகளை அரவணைப்பதற்குப் பண வசதி தொடர்பற்றது என்று தெரிகிறது. பெற்றோர் தொழில் ரீதியாக அதிக நேரத்தை வெளியில் செலவிடுவதால் பிள்ளைகளுடன் இருந்து அவர்கள் விரும்புவதை நிறைவேற்ற முடியாத நிலையே இதில் காணப்படுகிறது.



சிறிய வயதுப் பிள்ளைகள் ஓரிடத்தில் அதிக நேரம் இருக்க மாட்டார்கள். சில வேளை ஒரு மணி நேரத்தைக்கூடக் குறிப்பிட்ட சூழலில் அங்கு செலவிட விருப்பமின்றி வேறு எதையாவது செய்ய முற்படுவார்கள். அதன் பின்னர் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் அதைத் தொடாதே, இதை எடுக்காதே என வற்புறுத்துவதால் பிள்ளைகளுக்குச் சலிப்பு ஏற்படுகிறது. இத்தகைய சூழலில் பிள்ளைகளை வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுவது, விளையாட்டுகளில் ஈடுபட வைப்பது, பூங்கா, களியாட்டம், கடற்கரை, என அழைத்துச்செல்வதால் பிள்ளைகள் புதிதாகப் பலவற்றை அறிந்துகொள்ளவும் அனுபவங்களைப் பெறவும் சுறுசுறுப்பாக இருக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய மன உளைச்சல் இல்லாது போய்விடுகிறது.

**பெற்றோர் இணைந்து செயற்படுவது**

பிள்ளைகளைப் புதிய இடங்களுக்கு அழைத்துச் செல்வதில் தாயும் தந்தையும் இணைந்து செயற்படுவது மிக மிக அவசியமாகும். பிள்ளைகளுக்கு தாயை அல்லது தந்தையை அதிகம் பிடித்திருப்பதால் தமது தேவைகளை அவர்களிடமே முதலில் தெரிவிப்பார்கள். பிள்ளைகளின் அந்த விருப்பத்தைத் தாய், தந்தை இருவரும் சேர்ந்து நிறைவேற்றிக் கொடுப்பது அந்த இடத்தில் தமமது பிள்ளைகளைப் பராட்டுவது போன்ற விடயங்களே ஆளுமையுள்ள பிள்ளைகளாக அவர்களை வளர வழி வகுக்கும்.

**கல்வியில் மட்டும் கண்**

பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காகவே அதிகம் பாடு படுகின்றனர். தொடர்ச்சியாகத் தனியார் வகுப்புகளுக்கு ஏற்றியிறக்குவதென்பது ஒரு வகையில் குதிரைப் பந்தயத்துக்குக் குதிரைகளைத் தயார்ப்படுத்துவதற்கு ஒப்பானதாக ஆகிவிட்டது. இச் செயற்பாட்டில் பிள்ளையின் விருப்பு, வெறுப்புப் பற்றிப் பெற்றோர்கள் கண்டுகொள்வதேயில்லை. படித்த பெற்றோர்கூட மற்றவர்களின் பிள்ளைகள் எங்கெல்லாம் தனியார் வகுப்புகளுக்கும் சூம் வகுப்புகளுக்கும் செல்கிறார்கள் என அறிந்து தமது பிள்ளைகளையும் அங்கு இழுத்துச்

**வெளியே பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி ஒரு பட்டிமன்றத்தையே நடத்திக் கொண்டிருப்பார்கள். ஆனால் பரீட்சை முடிவுகள் வந்தபின் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அந்தத் தனியார் கல்வி நிலையத்தில் முன்வரிசையில் இரண்டு வரிசை வாங்குகளில் மட்டுமே சித்தியடைந்த மாணவர்கள் அமர்ந்திருப்பார்கள். அவர்களுடன் படித்தவர்களில் 80 வீதத்தினர் சித்தியடையவில்லை என்பது பலருக்கும் தெரியாத சங்கதி.**



செல்லவே செய்கின்றனர். ஒரு சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று ஆசை தீர்க்கின்றனர். அவர்கள் எங்கெல்லாம் அழைத்துச் செல்கிறார்கள்? பிள்ளைகளுக்குத் தேவையானவற்றை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள்? என்பதை மற்றைய பெற்றோர்களில் சிலர் அறிந்து கொண்டாலும் அவற்றைத் தமது பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டும் என விரும்புவதில்லை. தமது நண்பர்களுக்கு அவர்களின் பெற்றோர் செய்யும் எதையும் தமது பெற்றோர்கள் செய்வதில்லை என்ற ஏக்கம் வெறுப்புணர்வு பெற்றோர் மீது ஏற்படுகிறது.

**பொருள்களைச் சேதப்படுத்துவது**

மன விரக்தியால் பொருள்களைச் சேதப்படுத்துகின்றனர். இது ஒரு வகையில் தமது பெற்றோரைப் பழி வாங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையாகும் பெறுமதியான பொருள்களைப் போட்டு உடைப்பது. பெறுமதியான ஆவணங்களைக் கிழித்தெறிவது, பணத்தைக் கத்திரிக் கோலால் வெட்டுவது, புத்தகத்தில் கண்டபடி கீறுவது, விளையாட்டுப் பொருள்களை அடித்துடைப்பது. கழற்றி வீசுவது, சிதைப்பது எனப் பல வழிகளில் தமது மனக் குமுறலை வெளிப்படுத்துகின்றனர்.

ஒரு மாணவனோ, மாணவியோ தமது அப்பியாசப் புHத்தகங்களில் எழுதும்போது எழுதும் தாளின் மறுபுறத்தில் அடையாளம் ஏற்படும் வகையில் எழுதினால்கூட அது அவர்களின் மன அழுத்தத்தையே காட்டுவதாக உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**படிப்பில் கவனமின்மை**

மன நிலைப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வகுப்பறைக் கல்வியில் அவதானிப்புகளைச் செலுத்தாது வேறு விடயங்களைப் பார்ப்பதிலும் தேவையற்ற விடயங்களில் கவனம் செலுத்துவதிலும் எதையாவது கீறிக் கொண்டிருப்பதிலும் ஈடுபடுவதால் ஏனைய மாணவர்களுடன் போட்டி போட்டுக் கல்வி கற்கும் வாய்ப்பை இழக்கின்றனர்.

இவ்வாறான குழப்படிகாரப் பிள்ளைகளை முக்கிய நிகழ்வுகள் அல்லது பொது இடங்களுக்கு அழைத்துச் சென்றால் அங்கு எதையாவது உடைத்து குரங்கு வேலை செய்துவிடுவான் அல்லது வாடி போடி என தூசன வார்த்தைகளால் பேசுவான் என்ற பயத்தில் அந்தப் பிள்ளைகளைப் பெற்றோர் அழைத்துச் செல்லாது தவிர்ப்பது பாதிக்கப்பட்ட பிள்ளையை மேலும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. அதேவேளை குறிப்பிட்ட பிள்ளையைப் பெற்றோர் ஏதாவது நிகழ்வுக்கு அழைத்துச் சென்றால் அந்த நிகழ்வை நடத்துபவர்கள் "அதுகள் அந்தப் பொடியனைக் கூட்டிக் கொண்டு வந்திருக்குதுகள் அவன் கட்டாயம் எதையாவது உடைப்பான் அல்லது சேதப்படுத்துவான் அனை ஒராள் பார்த்துக் கொள்ளுங்கோ" என்று கூறிக் குறிப்பிட்ட பிள்ளைக்குத் தெரியாமல் ஒழுங்குகளைச் செய்வதுண்டு.

**உளநலப் பாதிப்பு**

இவ்வாறு பொருள்களை சேதப்படுத்தும் முதல் சந்தர்ப்பத்தில் இவ்வளவு பெறுமதியான ஒன்றை நாசம் செய்துவிட்டாய் என உணரும்படி பிள்ளைகளுடன் விநயமாகப் பேசி இனிமேல் இப்படிச் செய்யக்கூடாது என்றுவழிப்படுத்த வேண்டும். இரண்டாவது தடவையும் அதே தவறைச் செய்தால் தண்டிக்கலாம். மீண்டும் அதே பிழை செய்தால் அது அவனது மன நிலைப் பாதிப்பு என்பதை அறிந்து உள நல மருத்துவர் ஒருவரை நாடுவது பெற்றோரின் கடப்பாடாகும். பலபெற்றோர் இதை ஏற்றுக்கொள்ள மறுப்பதே குறிப்பிட்ட சிறுவர்களை மிக மோசமான சமூக விரோதிகளாக எதிர்காலத்தில் மாறுவதற்கு வித்திடுகிறது.



கதிரேசன் காத்தவராயன்

# இப்பதான் தெரியுதோ?

அதிலை கோயிலடிக்குப் போவமெண்டு வெளிக்கிட்டுப் போக முருகேசர் வந்தார். அப்பிடியே கதைச்சுக்கொண்டு நடந்தம். வாசிசாலையிலை கனகர் இருந்தார். எங்களைக் கண்டிட்டுக் கூப்பிட்டார் போயிருந்துகொண்டம். 'என்னப்பா கதிரேசண்ணை உந்த நிவாரணமும் நாங்களும் படுகிற பாடு... பெரும் பாடு...' எண்டு கனகர் பெருமூச்சோடை தொடங்கினார்.

'ம்ம்..ம்ம்ம்...பெரும்பாடு ஆனால் உதெல்லாம் வழமைதானே? ஏதைத்தான் சரியாயும் நேர்மையாயும் செய்திருக்கிறம்?' எண்டு நான் சொல்லக் கனகர் 'மோசடியள்... செய்யிறமல்லோ?' எண்டார். 'மோசடியோ? ஆதைக்கூடச் சரியாய் பிடிபடாமல் செய்யிற திறமையிருக்கோ?' எண்டு சிரிச்சார் முருகேசர். 'ம்ம்..உண்மைதான்....' எண்டார் கனகர். அந்த நேரம் சுதனும் அவனின்ரை கூட்டாளியள் நாலஞ்சு பேருமாய் வந்தவங்கள் எங்களைக் கண்டிட்டு சிரிச்சுக்கொண்டு உள்ளை வந்து இருந்துகொண்டாங்கள்.

'என்ன ஐயா கதையைக் குழப்பிப்போட்டமோ?' எண்டான் ஒருத்தன். 'இல்லையில்லை இப்பதான் ஒரு இடமும் இரகசியமெண்டொண்டும் இல்லையே?' எண்டு முருகேசர் சிரிச்சார். பெடியள் ஆளையாள் பாத்தாங்கள். முருகேசற்றை கதையின்ரை தொனி அப்பிடித்தான் இருந்தது. சுதன் சமாளிப்புமாதிரி ஒரு சிரிப்புச் சிரிச்சான். 'நவீனசாதனங்கள் அப்பிடி ஆக்கிப் போட்டுதுகள்' எண்டு சமாளிச்சன்.

'தம்பியவை உங்கடை பக்கத்திலை ஆளையாள் கிழிச்சு காயவிடுகிறாங்கள் அப்பன்... அப்பிடியேதும் இருக்கோ? அல்லது வழமை மாதிரியோ?' எண்டு கேட்டார் முருகே

**ஆசிரியர் - மாணவர் கவனிப்பு**

ஒரு வகுப்பில் 30மாணவர்கள் இருந்தால் அதில் 5மாணவர்களாவது மன அழுத்தங்களுக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். போட்டி போட்டுப் படிப்பதில் ஆர்வம் காட்டாது ஒதுங்குவதால் மெல்லக் கற்கும் மாணவர்கள் ஆகிவிடுகின்றனர். இது அவர்களுக்குத் தாழ்வுச் சிக்கல்களை ஏற்படுத்திவிடுகிறது. இந்த மாணவர்கள் மகிழ்ச்சி இல்லாதவர்களாகவும் மற்றைய மாணவர்களில் எரிச்சல் அடைபவர்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

இவர்களை அவதானிக்கும் ஆசிரியர்கள் அது பற்றி அந்த மாணவர்களின் பெற்றோருக்கு எடுத்துக்கூறினால்அதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால் ஆசிரியர்கள் குறிப்பிட்ட மாணவர்களையும் அவர்களின் பெற்றோரையும் கைவிடுகின்ற நிலை ஏற்படுகிறது.

**புலமைப் பரிசில் பரீட்சை**

புலமைப் பரிசில் பரீட்சைக்கான பல தனியார் வகுப்புகளில் அங்குள்ள இருக்கைகள் அனைத்தும் நிறைந்த அளவில் மாணவர்கள் மிக நெருக்கமாக இருப்பார்கள். வெளியே பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி ஒரு பட்டிமன்றத்தையே நடத்திக்கொண்டிருப்பார்கள். ஆனால் பரீட்சை முடிவுகள் வந்தபின் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அந்தத் தனியார் கல்வி நிலையத்தில் முன்வரிசையில் இரண்டு வரிசை வாங்குகளில் மட்டுமே சித்தியடைந்த மாணவர்கள் அமர்ந்திருப்பார்கள். அவர்களுடன் படித்தவர்களில் 80 வீதத்தினர் சித்தியடையவில்லை என்பது பலருக்கும் தெரியாத சங்கதி. பரீட்சையில் சித்தி அடையாத மாணவர்களோ பெற்றோரோ அந்த நாளில் அங்கு செல்லாததால் இந்த விடயம் வெளித்தெரிவதில்லை.

**வீட்டு வேலை**

மன அழுத்தத்துக்கு உட்பட்ட மாணவர்கள் வீட்டில் செய்யும் அப்பியாசங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் அதிகம் களைத்த நிலையிலிருப்பதால் உடற்சோர்வு, மனச்சோர்வு ஏற்படுகிறது. பல மாணவர்கள் தமக்குத் தந்த ஹோம் வேர்க் பற்றி பெற்றோருக்குத் தெரியப்படுத்துவதில்லை. ஆனால், பிள்ளை ஒழுங்காகப் பாடசாலைக்குப் போகிறாது, தனியார் வகுப்புக்குப் போகிறது என்ற அளவில் பெற்றோர் திருப்தி அடைகின்றனர். இந்த இரு இடங்களிலும் கற்பித்தவற்றைப் பிள்ளைகள் திருப்பிப் படிக்கிறார்களா என்று பெற்றோர் பார்ப்பதில்லை. இந்தச் சூழல் சாதாரண தரம் தொடக்கம் உயர்தர மாணவர்கள் வரை காணப்படுகிறது.

பிள்ளைகளை அரவணைத்து அவர்களின் நிலையைப் புரிந்துகொண்டு பெற்நோர் வழிப்படுத்தத் தவறும் பட்சத்தில் அவர்கள் தமது குடும்பத்துக்கும் உமவாமல் சமூகத்துக்கும் உதவாமல் ஆகிவிடுகின்றனர். பிள்ளைகளின் நடத்தைகளை வைத்து அவர்களை வழிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு பெற்றோரதும் கடப்பாடாகும். வீட்டில் நெறிப்படுத்தப்படாத பிள்ளைகைள வேறு எந்த வகையிலும் நெறிப்படுத்த முடியாது.

சர் ஒருவிதமான சிரிப்போடை. பெடியள் ஆளை யாள் பாத்தாங்கள். அதிலையொருத்தன் மட்டும் ஒரு சிரிப்போடை 'இருக்கு அனால் இல்லை' எண்டான்.

'தம்பி ஒண்டு இருக்கெண்டு சொல்லும்...அல்லது இல்லையெண்டு சொல்லும்...அதென்ன உம் மடை கதை?' எண்டார் கனகர் ஒரு எரிச்சல் தொனியோடை. 'அது கனகண்ணை... முழுதும் உண்மையில்லை எண்டதுதான்...நடந்திருக்கெண்டுதான் சொல்லுகினம்...ஆனால் வாலுகள் தலையள் கனக்க முளைச்சும் இருக்குதாம்... அதுதான் உப்பிடி' எண்டான் சுதன்.

'அதுகளைத் தம்பியவை தெரியாமலுக்குத்தான் கேக்கிறன்... சம்மந்தப்பட்டவை உடனையே மறுத்திருக்கலாம் அல்லது நடந்த உண்மையைச் சொல்லியிருக்கலாமல்லே? அவையின்ரை மௌனமல்லே கனக்கப் புகையைக் கிளப்புது?' எண்டன் நான். 'அது...அதுதான் பிரச்சனை... தங்களிலையே தங்களுக்கு நம்பிக்கையில்லை... அதோடை வழமையை மாதிரி அவையின்ரை வேலை வேகம்... ஒரு கடிதம் அடிச்சு கையெழுத்து வைச்சு அனுப்பிறதெண்ட விசயமே மாதக் கணக்கல்லே ஆகுது?' எண்டான் இன்னொருத்தன்.

'அப்பிடியெண்டும் சொல்லேலாமலல்லே கிடக்குது... தங்கடை அலுவலுகளை வேகமாயல்லே செய்யிறவை...' எண்டு சிரிப்போடை இன்னொருத்தன் சொன்னான். 'தங்கடை இடமாத்தங்கள்... தங்கடையாக்களின்ரை இடமாற்றங்கள்..புரொமோசனுகள்... விசாரணையள் தீர்ப்புகள் எண்டு கனக்கவல்லே நடக்குது...' எண்டு முருகேசர் சொல்ல சுதனும் பெடியளும் நெளிஞ்சாங்கள்.

'அதுகள் எப்பிடி எனக்குத்தெரியும் எண்டு யோசிக்கிறியளோ?' எண்டு முருகேசர் சிரிச்சார். 'அதுதான் இப்பத்தையான் தொடர்புகளின்ரை வேகம்...அப்பிடியோ முருகேசு?' எண்டு நான் கேட்டன். 'முதல்லை சொன்னதல்லே இப்ப இரகசியமெண்டொண்டு இல்லையெண்டு... அதுதான்' எண்டு சிரிச்சார் முருகேசர். 'அப்ப உங்களை அங்கைதான் வைச்சிருக்கவேணும்' எண்டு சிரிச்சார் கனகர். 'எங்கை? ஜெயிலிலையோ? ஏண்டு பிலத்தாச் சிரிச்சார் முருகேசர்.

'அது சரிதான் தம்பியவை உங்கடை இடமாற்றம் பிச்சல் பிடுங்கலுகளோடை ஏழெட்டு வரியத்துக்கொருக்காத்தானே பெரிய ஆர்ப்பாட்டம் போட்டு நடக்குது... ஆனால் மேல்க் கதிரையள் அடிக்கடி மாறுதுகள்? அதுகும் சத்தமே இல்லாமல்...' எண்டு நிப்பாட்டி சுத்தியும் எல்லாரையும் பாத்தார். 'அது ஏன்?' எண்டுஅவசரப்பட்டார் கனகர்.

'அப்பிடி மாறிக்கொண்டிருந்தால் பொறுப்புச் சொல்லுகிற வேலையள் இராதல்லே?' எண்டுமுருகேசர் சொன்னார். 'அதைவிட இப்ப பென்சனுக் கெண்டும் ஒரு திணைக்களத்தை வடக்கிலை வைச்சிருக்கினமாம்...கனபேர் அங்கையிருந்துதான் வீட்டுக்குப் போயிருக்கினமாம்' எண்டார் முருகேசர் 'அகப்பைபிடிக்கிறவன் நம்மாளெண்டால் கடைசிச் சபையெண்டாலென்ன? இதுகள் இப்பதான் விளங்கூதோ?' எண்டுகொண்டு வந்திட்டன்.

# மீட்டல்...

17

துன்பானந்த சுவாமி



நாம் எமது உடலிற்கான பயிற்சியை இயல்பான நிலையிலிருந்து விலகி செயற்கையாக எமது பொருளாதார மேம்பாட்டுக்கு எந்தவிதத்திலும் தொடர்பற்ற முறையில் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மனதிற்கான பயிற்சியும் அவ்வாறாகவே வலிந்த விதமாகவே வழங்கப்படுகிறது. உடலோ மனமோ இயல்பை மீறி வலிந்து பயிற்சியளிக்கப்படுகிற சூழலில் செயற்கைகளுக்கே இயல்பாக்கடைந்து வருகின்றன.

இங்கே எமது மனம் உடல் சார்ந்த ஆரோக்கியம் மட்டுமல்ல எமது பொருளாதாரமும் சேதமாகிறது. எமது உடலிற்கான ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதாக நம்பி நாம் வாங்கிப் போடுகிற சாதனங்களிற்கான மூலதனம் மற்றும் பராமரிப்பிற்கான மேலதிக செலவு என செலவுப் பட்டியல் நீள்கிறது. வீட்டுக்குள் சைக்கிளோட்டும் கருவி காசை விழுங்கியபடி இருக்கிறது. நாம் மோட்டார் வாகனத்தில்தான் நடமாடுகிறோம். ஆதற்காகவும் அதன் எரிபொருளுக்காகவும் பராமரிப்புக்காகவும் ஏராளமாகச் செலவிடுகிறோம்.

எமது ஆரோக்கியம் என்கிற ஒன்றை நாமே தீர்மானிக்க முடியாத நாம் அதனை இயந்திரங்களிடம் விட்டு வைத்திருக்கிறொம் என்கிற உண்மையை உணர முடியாதவர்களாகவே உள்ளோம். நாம் எமது உணவுப் பழக்கத்தை மாற்றியதோடு உடலுக்கான பயிற்சியையும் தவிர்த்துவிட்டோம். போசணையும் இல்லை பயிற்சியும் இல்லை. எமது உடலாரோக்கியம் தளம்பும்போது உளச் சமநிலையும் தொலைகிறது.

இங்கேதான் எமது உளத்தை உட

# படித்தவர்களின் உயிர்மாய்ப்பு...!





**துசாந்த்**

அண்மையில் ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 3ஆம் வருட மாணவன் விக்னேஸ்வரன் அபிநயன் என்பவரும், பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 1ஆம் ஆண்டு பொறியியல் பீட மாணவன் நற்குணராசா குகதீஸ் என்பவரும் தவறான முடிவெடுத்துத் தூக்கிட்டுத் தமது உயிரை மாய்த்துக்கொண்டனர். இந்த இரண்டு மாணவர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் எதிர்காலத்தில் பொறியியலாளர்களாக இலங்கையிலோ வெளிநாடுகளிலோ பணியாற்ற வேண்டியவர்கள். படித்த, பல விடயங்களையும் தெரிந்து வைத்திருந்த இந்த மாணவர்களின் அகாலச் சாவு அவர்களது குடும்பத்தினருக்குப் பேரிழப்பாக அமைந்திருக்கிறது. அதேவேளை நண்பர்கள் மட்டத்திலும், அவர்களின் பாடசாலை, ஊர்கள் என்ற மட்டத்திலும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த மாணவர்களைத் தமது முன்னுதாரணமாக (றோல் மொடலாக) எண்ணியிருந்த சகோதரர்கள், நண்பர்கள், ஊர் மாணவர்கள், பாடசாலையின் கனிஷ்ட மாணவர்கள் என அனைவரையும் இந்த இருவரின் தவறான முடிவுகள் மனதளவில் அதிகம் பாதித்திருக்கின்றன.

**யார் பொறுப்பு...?**

இவர்களின் உயிர்மாய்ப்புகளுக்கு வறுமையையோ, குடும்ப அங்கத்தவர்களையோ பொறுப்புக் கூறிவிட முடியாது. குடும்பத்தினரின் அதிக பட்ச ஒத்துழைப்புக் காரணமாகவே உயர்தரம் வரை படித்துப்

லோடு இணைத்து ஆரோக்கியமாக பராமரிப்பதற்காக தியானம் யோகாசனம் என்று வழிகளைத் தேடுகிறோம். அவை மட்டும் காலத்துக்கேற்ற விதமாகப் பரிணாமம் அடையாதிருக்குமா? அதற்கான வாய்ப்புகளேதும் இருக்கின்றனவா? நிறையவே இருக்கின்றன. அதனைவிட சமூக அந்தஸ்த்து ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த அந்தஸ்தினது செல்வாக்கு அதற்கான கேள்வியை அதிகரித்திருக்கிறது.

ஆச்சிரமங்கள் தவச்சாலைகளில் வாழ்ந்ததுகொண்டிருந்த யோகக்கலையானது இன்று நட்சத்திர விடுதிகளிற்கானதாகி விட்டிருக்கிறது. ஆச்சிரமங்களில் யோகாவிற்கிருந்த இயற்கையினது போசிப்புகளாலான ஆரோக்கியத்தை குளிரூட்டப்பட்ட மண்டபங்களில் எதிர்பார்க்க முடியுமா? மனத்தை உடலோடு பராமரிப்பதற்காக ஆச்சிரமங்களிலிருந்த இயற்கையை நம்பிய வாழ்க்கை முறையை முழுதுமாக மாற்றிவிட்டோம்.

ஆகமொத்தமாக யோகக்கலைகூட வியாபாரப்பண்டம் போல ஆகிவிட்டது. வுPற்பனைச் சரக்கென்றான பின்னர் ஒரு பொருளினது தரம் பற்றிப் பேசவே வேண்டியதில்லையல்லவா? இன்று புகழ் பணமீட்டலை நோக்காகக் கொண்ட பல நிலையங்களில் கற்றுக்குட்டிகளின் கைகளில் இருக்கிற பண்டத்தால் தேவை நாடிக்கான தீர்வைத்தர இயலுமா?

ஆகமொத்தமாக நுகர்வென்பதுகூட ஆடம்பரம் நோக்கியதாகிவிட்டது. இவ்விடத்தில் நாம் எமது நிலையினது யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளதென்பதை உணர்கிறோமா? நிச்சயமாய் இல்லை. பலரோ சிலரோ ஓடும் திசையில் சேர்ந்தோடுகிறோம் என்பதைத்தவிரஒன்றும் இல்லை. நான் யார்? எனக்கு என்ன தேவை? எனது மனம் எப்படியானது? போன்ற விடயங்களில் இருக்கவேண்டிய எமது கவனம் திசை மாற்றப்பட்டிருக்கிறது.

நாம் எம்மீது கவனம் செலுத்தமுடியாத நிலையில் நாம் இருக்கிறோம் என்பதே உண்மை. நாம் உணவு உடலுழைப்பு மூலமான சிறந்த பயிற்சி என அவற்றை மட்டுமா தவறவிடகிறோம். உடைகள் சார்ந்தும் தவறிழைத்தே வருகிறோம். அது என்ன உடைகள் என்று புதிதாகவிருக்கிறதே என்று யோசிக்கிறீர்களா? உடைகள் பற்றிப் பேசவும் ஏராளமாக விடயங்கள் உள்ளன. பேசுவோம்.

பரீட்சைகளில் சித்தியடைந்து பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகக் காரணமாக இருந்திருக்கிறார்கள். அத்தகைய அளப்பரிய பங்களிப்பைச் செய்த குடும்பத்தினர் இவர்களின் உயிர்மாய்ப்புக்குக் காரணமாக இருக்க வாய்ப்பில்லை.

காதல் தோல்வியால் உயிரை மாய்ப்பது என்கிற நிலை முன்பொரு காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்தது. ஆனால் தற்போதைய சூழலில் அவ்வாறானதொரு விடயத்தில் உயிர்மாய்க்கும் நிலை மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. காதல் தோல்வி காரணமாக இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் இறந்திருக்க வாய்ப்பில்லை என்றும்கூடத் தெரிகிறது.

**சமூக மயப்படாத நிலை**

உயிர் மாய்ப்பவர்களில் பலர் படித்தவர்களாக இருப்பினும் அவர்கள் சமூக மயப்படாதவர்களாவே காணப்படுகின்றனர். இந்த நிலை உயர்தரம் படிக்கும் காலத்திலேயே பல மாணவர்களிடம் காணப்படுகிறது. எப்படியாவது பல்கலைக்கழகத்துக்குச் சென்றுவிட வேண்டும் என்ற அவர்களின் எண்ணமும் குடும்பத்தினரின் நெருக்கடிகளும் அவர்களைத் தனிமைப்படுத்துவதுடன் குடும்ப அங்கத்தவர்களுடன் கூடக் கலந்துபேசும் சூழலைத் தவிர்த்து விடுகிறார்கள். பின்னர் பரீட்சைகளில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகுகின்ற இந்த மாணவர்கள் தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றபின் அங்கு அவர்களுக்குக் கிடைக்கிற சுதந்திரமான சூழல் இங்கிருந்த சூழலைவிட அவர்களை வேறுபட்ட வித்தியாசமான வழிகளில் சிந்திக்கவும் செயற்படவும் செய்துவிடுகிறது. பலர் போதைக்கு அடிமையாகி இறக்கின்றனர். போதைப் பாவனையால் எதிர்பார்த்த அளவுக்குக் கல்வியை வெற்றிகரமாகத் தொடரமுடியாத நிலையில் மனமுடைந்து உயிர்மாய்க்கின்றனர்.

வேறு சிலர் தம்மைத் தனிமப்படுத்திக் கொள்கின்றனர். மாணவர்களிடமிருந்து ஒதுங்கி நண்பர்கள் இல்லாத சூழலையும் சமூக மயப்படாத நிலையையும் ஏற்படுத்துகின்றனர். சிறு வயதிலிருந்தே சிங்களவர்கள் கெட்டவர்கள் என்ற பின்னூட்டல்களால் வளர்க்கப்பட்டிருப்பதால் சிங்களச் சமூகத்துக்குள் இறங்கவோ சிங்களவர்களுடன் பேசவோ இத்தகைய மாணவர்கள் அதிகம் விரும்புவதில்லை. இதனால் பல மாணவர்கள் தம்மைத் தாமே தனிமைப்படுத்திக்கொள்கின்றனர். அவர்களைச் சமூகம் ஓரம்கட்டாத நிலையில் அவர்கள் தாமாக ஓரங்கட்டப்படுகிற்னர்.

**கைபேசிகளின் ஆதிக்கம்**

தற்போதைய சூழலில் பல மாணவர்கள் அதிக நேரத்தைக் கைபேசிகளுடன் செலவிடுவதால் தூக்கமின்மை, ஒழுங்கான உணவின்மை, உடற்பயிற்சியின்மை காரணமாக இயல்பிலேயே அதிக உற்சாகமாக இருந்த மாவர்கள்கூட ஓரிடத்தில் முடங்கிவிடுகின்றனர். தமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குச் சமூக வலைத்தளங்கள் ஊடாகத் தீர்வு கண்டுவிடலாம் என்று நினைத்து அவர்களுக்கு ஏற்படும் சிறிய பிரச்சினைகளை மேலும் பெரிதாக்கி அதற்குத் தீர்வு காண முடியாத நிலையில் அதுபற்றி யாருடனும் கலந்தாலோசிக்காமல் உயிர்மாய்த்து விடுகின்றனர். இவ்வாறான சுய தனிமப்படுத்தல் பற்றி அருகிலிருப்பவர்களுக்குக் கூட எதுவும் தெரிவதில்லை.

**சூதாட்டம்**

இணையத்தளங்கள் ஊடாகப் பலர் சூதாட்டங்களை மேற்கொண்டு தமது படிப்புக்காகக் குடும்பத்தினர் வழங்குகின்ற பணத்தை வீண் விரயம் செய்து விடுகின்றனர். இதனால் படிப்பு என்பதற்கு அப்பால் தமது பொருளாதாரப் பிரச்சினையில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. பலர் அதிகமான கடன்களையும் வாங்குகின்றனர். இந்தப் பிரச்சினைகளும் மன உளைச்சல்களும் தமது எதிர்கால இலக்கை இல்லாது செய்துவிட்டது என்ற தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்துவதால் பலர் உயிர் மாய்ப்பைத் தீர்வாக எடுத்துக்கொள்கின்றனர்.

> அந்த மாணவர்களைத் தமது முன்னுதாரணமாக (றோல் மொடலாக) எண்ணியிருந்த சகோதரர்கள், நண்பர்கள், ஊர் மாணவர்கள், பாடசாலையின் கனிஷ்ட மாணவர்கள் என அனைவரையும் இந்த இருவரின் தவறான முடிவுகள் மனதளவில் அதிகம் பாதித்திருக்கின்றன.

பல்கலைக்கழக மாணவனின் உயிர் மாய்ப்புகளில் மேற்கூறப்பட்ட காரணங்களில் ஏதாவது ஒன்றே ஆதிக்கம் செலுத்துவதால் கல்வியில் பின்னடைவு ஏற்பட்டுத் தம்மைத் தாமே அழித்து விடுகின்றனர். அதனால் அவர்களது சகோதரர்கள் அதிகம் பாதிப்புக்கு உள்ளகின்றனர். அவர்களை ஓர் இலக்குடன் வளர்த்த பெற்றோரை இந்த உயிர்மாய்ப்புகள் அதிகம் பாதிக்கின்றன. உயிர் மாய்க்கும் மாணவர்கள் தாம் இறப்பதால் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்பதைக்கூடச் சிந்திப்பதில்லை. அவ்வாறு சிந்தித்தால் ஏதோ ஒரு காரணி அவர்களின் உயிர் மாய்ப்பைத் தவிர்த்துவிட வாய்ப்புண்டு, ஓர் இளைஞனின், யுவதியின் நடத்தையில் ஏதாவது மாற்றம் தெரிந்தால் அருகிலிருக்கும் நண்பர்களோ உறவுக்காரரோ அவர்களைத் தனிமைப்பட விடாது பார்த்துக்கொள்வதன் மூலம் இந்த உயிர்மாய்ப்புகளுக்கான சந்தர்ப்பங்களை ஓரளவுக்காவது தவிர்க்க முடியும். மாணவர்கள் சமூக மயப்படாது தனித்திருப்பதே இந்த உயிர்மாய்ப்புகளுக்குக் காரணம்.

# ஏன்...?

நட்சத்திரா

# அப்டி...?

## வாத்துகளுக்குத் தனி மரியாதை

55



பன்னாட்டு அளவில் வீதிப்போக்குவரத்து விதிகளில் பொதுவான நடைமுறைகளே பேணப்பட்டு வருகின்றன. எந்த வாகனமாக இருந்தாலும் சாரதிகளுக்கு விடுக்கப்படும் அறிவுறுத்தல்களும், அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளும் ஒன்றாகவே இருக்கின்றன. உந்துருளியைச் செலுத்திச் செல்பவராக இருந்தாலும் சரி, பாரவூர்தியைச் செலுத்திச் செல்பவராக இருந்தாலும் சரி சாரதிகளுக்குரிய நடைமுறை ஒன்றுதான். இதைப் பல சாரதிகள் புரிந்து வைத்திருப்பதில்லை.

வீதியில் மிருகங்கள் குறுக்கிட்டால் அவை வீதியைக் கடக்கும் வரை வாகனத்தைச் செலுத்தாது காத்திருக்கவேண்டியிருப்பதும் அனைவருக்கும் பொதுவான விதிதான். இதில் யானை முக்கியமானது. வீதியைக் கடந்து செல்ல முற்படும் யானைக்கு இடைஞ்சலை ஏற்படுத்தினால், அந்த வீதியில் செல்லும் எந்த வாகனத்தையும் அது போக்குவரத்துச் செய்ய விடாது. வாகனங்களை அடித்து நொருக்கிச் சேதப்படுத்துவதுடன் மக்களைக் கொல்லும் நிலையும் ஏற்படும்.

அதேபோல ஆமை வீதியில் இறங்கினால் அவை அடுத்த பக்கம் செல்லும் வரை எந்தப் பெரிய வாகனமாக இருந்தாலும் காத்து நிற்கவேண்டியிருக்கும். ஆமையைக் கவனத்தில் எடுக்காமல் வாகனத்தைச் செலுத்தினால், கல்லுப்போல தடையாகச் சக்கரத்துக்குக் குறுக்காகத் தனது ஓட்டுக்குள் முடங்கிக் காணப்பட்டு வாகனங்களைத் தடம் புரட்டும் நிலையும் ஏற்படும். இதில் ஆமை இறக்காமல் இருக்கவும் இறக்கவும் வாய்ப்புண்டு. வாகனத்துக்கும் அதில் பயணிக்கும் உயிர்களுக்கும் பாதிப்புகள் நிச்சயம் ஏற்படும்.

இவை எல்லாவற்றையும்விட வீதிப் போக்குவரத்தில் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டிய ஒன்று தாரா அல்லது வாத்து என்கிற பறவை மீது. இவை தனியாகவோ கூட்டமாகவோ வீதியில் இறங்கி



# இவை தனியாகவோ கூட்டமாகவோ வீதியில் இறங்கிவிட்டால் வாகனத்தை அப்பால் நகர்த்தவே கூடாது என்பது பன்னாட்டுப் போக்குவரத்தில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நடைமுறையாகும்.

விட்டால் வாகனத்தை அப்பால் நகர்த்தவே கூடாது என்பது பன்னாட்டுப் போக்குவரத்தில் கடைப்பிடிக்கப் பட்டு வரும் நடைமுறையாகும். ஏனைய விலங்குகளோ பறவைகளோ ஊர்வனவுகளோ வீதியைக் குறுக்கிட்டால், கோர்ன் ஒலியை எழுப்பும் போது அல்லது வாகன விளக்கு வெளிச்சத்தைப் பாய்ச்சும்போது அவை விரைவாக வீதியைக் கடந்து விடும். அல்லது கடக்க முற்படும். ஆனால் வாத்துகள் அவ்வாறல்ல. பகலோ, இரவோ எந்த நேரமானாலும் குறிப்பிட்ட வாகனத்தை நோக்கிச் செல்லும் பழக்கமே அவற்றுக்குண்டு. எனவே அவற்றை வீதியிலிருந்து அப்புறப்படுத்திய பின்னரே வாகனத்தை இப்பால் நகர்த்திச் செல்ல வேண்டும். இதுவே பன்னாட்டுச் சாரதிய நடைமுறையாகவும் இருக்கிறது.




ஏன் அப்படி...?'' பகுதியில் கடந்த வாரம் உலங்கு வானூர்தியின் ஒளிப்படத்துக்கு மாறாக வானூர்தியின் ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்டுவிட்டது என்பதை வாசகர்களுக்குத் தயவுடன் அறியத்தருவதோடு தவறுக்கும் வருந்துகிறோம்.

# அணிசாராக் கொள்கையும் கபட நாடகமும்....!



> ''...பெயர்... ஆகிய நான் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் இலங்கையின் ஆட்புலத்துக்குள்ளாகத் தனி அரசொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவளிக்கவோ ஆக்கமளிக்கவோ ஊக்குவிப்பு அளிக்கவோ நிதி உதவவோ பரிந்துரைக்கவோ மாட்டேன் என்று பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன், சத்தியம் செய்கிறேன்''

**நியூட்டன்**

ஆளும் கட்சியுடனோ, எதிர்க்கட்சியுடனோ தமக்கு ஒட்டுமில்லை உறவுமில்லை என்றே தமிழ் அரசியல்வா திகள் காட்டிக்கொள்கின்றனர். ஆளும் சிங்களத் தரப்புடனோ சிங்கள எதிர்க்கட்சிகளுடனோ அவ் வாறு இருப்பது ஒரு புறமிருக்கத் தமது அணிசாராக் கொள் கையை ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் இவர்கள் வைத்திருப் பதுதான் மிகக் கொடுமையான யதார்த்தமாக உள்ளது. இதில் நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடக்கும்போது தமது கொள்கை இதுதான் என வெளிப்படையாக அறிவித்து அதை ஆதரித்து அல்லது எதிர் த்து தமது மக்களுக்குச் சார்பாக வாக்களித்துத் தமது நியாயப்பட்டை முன்னிறுத்தாது வாக்களிப்பிலிருந்து விலகுவதாக நாடகம் ஆடு கின்றனர்.

**சத்தியப்பிரமாணமும் தமிழ் உறுப்பினர்களும்**

நாடாளுமன்றில் வீரவேசமாகப் பேசுகின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரை சத்தியப்பிரமாணத்தின் முதலாவது சொல்லாக இணைத்து வாசித்தால், ''...பெயர்... ஆகிய நான் இலங்கை சனநாயகச் சோசலிசக் குடிய ரசின் அரசமைப்பை உறுதியாகப் போற்றிக் காப்பேன் என்றும் இலங்கையின் ஆட்புலத்துக் குள்ளாகத் தனி அரசொன்று ஸ்தாபிக்கப்படு வதற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளி யிலோ ஆதரவளிக்கவோ ஆக்கமளிக்கவோ ஊக்குவிப்பு அளிக்கவோ நிதி உதவவோ பரிந் துரைக்கவோ மாட்டேன் என்று பயபக்தியுடன் வெளிப்படுத்தி உறுதி செய்கிறேன், சத்தியம் செய்கிறேன்'' என நசத்தியப்பிரமாணம் செய் யப்படுகிறது. அதை மீறி மக்கள் சார்பாகத்





# தண்டட்டி

## வரவேற்கத்தக்க சினிமா

கிடாரிப்பட்டி என்ற கிராமத்தில் வசிக்கும் தங்கப் பொண்ணு (ரோகிணி), திடீரெனக் காணாமல் போய்விடுகிறார். அவரைக் கண்டுபிடித்து தரச் சொல்கிறார்கள் அவரது மகள்கள். விவகாரம் பிடித்த ஊரான அங்கு செல்வதற்குக் காவலர்கள் மறுத்துவிடுகின்றனர். ஆனால், அங்கு புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் தலைமைக் காவலர் சுப்பிரமணி (பசுபதி) அங்கு செல்கிறார். அவரைக் கண்டுபிடித்த நிலையில் திடீரென சாவடைகிறார் தங்கப்பொண்ணு. அவர் சடலமாக வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் போது, அவரின் 4 மகள்களும் மகனும் அவர் காதில் மாட்டியிருக்கும் தண்டட்டியை (பாம்படம்) எப்படிக் கைப்பற்றலாம் எனத் தனித்தனியாகத் திட்டம் போடுகின்றனர். இந்த நிலையில் திடீரென மாயமாகிறது தண்டட்டி. அதைத் திருடியது யார்? காவலர் சுப்பிரமணி அதைக் கண்டுபிடித்தாரா? அந்தத் தண்டட்டி யாருக்குச் சொந்தமானது என்பதைக் கொஞ்சம் நகைச்சுவை, நிறைய சுவாரஸ்யம் மற்றும் திருப்பங்களோடு ரசனையாகச் சொல்கிறது படம்.



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட விரும்ப மாட்டார்கள் என்பதை அவர்களுக்கு வாக்களித்த மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

**நாடாளு வாக்களிப்புகள்**

தற்போது இலங்கை அரசியலில் மிக முக்கிய பேசு பொருளாகவிருப்பது இலங்கையின் கடன் மறுசீரமைப்புப் பற்றிய விவாதங்களே. இதில் ஊழியர் சேமலாப நிதியைக் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சேர்த்துக் கொள்வது என்ற அரசின் முடிவும், நிலை யான வைப்புத் தொடர்பிலான விடயங்களும் மிக வும் காரசாரமாக உள்ள நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் நாடளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும் சாணக்கியனும் பல்வேறு எதிர்க்கருத்துக் களை வெளியிட்டுவருகிறார்கள். இந்த நிலையில் அந்தப் பிரேரணையை எதிர்த்து நாடாளுமன்றில் இவர்கள் வாக்களிக்கப்போவதில்லை. வாக்களிக்காது தவிர்ப்பது என்று கடந்த கால வாக்களிப்புக்களின்போது எடுத்த முடிவுகளைப்போல (கஜேந்திரகுமார் பொன் னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உட்பட) இந்த முறையும் இவர்கள் முடிவு எடுத்தால் அது ரணில் அரசுக்கு சார்பான முன்னெடுப்பாகவே இருக்கும்.

வாக்கெடுப்பு நடக்கும் நாளில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலேயே இருக்க வேண்டும் என அரசதலைவர் பகிரங்கமாக அறிவித்திருப்பது இந்த வாக்கெடுப்பின்போது நாடாளுமன்றில் 3இல் இரண்டு பெரும்பான்மையை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்திலேயே ஆகும். இதில் ஆளும் கட்சியில் இடம்பெறாதவர்கள் சார்பாக வாக்களிக்க வைப்பது, வாக்களிப்பில் ஈடுபடாது இருப்பது ஆகிய இரு விடயங்களுக்கும் ஒரு வாக்குக்கு இவ்வளவு பணம் என இரகசியப் பேச்சுக்கள் உச்ச நிலையில் இருக்கும்போது நிகழ்வனவாகவே இருக்கும். இந்தச் சூழலில் தமிழ்த்தேசிய நாடாளு மன்ற உறுப்பினர்களைப் பொதறுத்தவரை அவர்கள் தெருவில் நடந்துபோனால் லாபம் ஒன்று முன்னே செல்லும் அல்லது பின்னால் வரும் என்ற நிலையே காணப்படுகிறது. தற்போதுள்ள பல உறுப்பினர்களுக்கு ஒரு விடயம் தெளிவாகவே தெரியும் இனிவரும் தேர்தலில் தாங்கள் வெல்லப்போவதில்லை என்பதும் தம்மால் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதும் நன்கு தெரியும். எனவே இந்த வாய்ப்புக்களை அவர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே விரும்புவர்.

நடிகர் வடிவேலு படம் ஒன்றில் ஒரு குடும்பத்தையே ஏற்பாடு செய்து தெருவில் வரும் வாகனங்களுக்கு முன்னால் ஒரு பையனைக் குதிக்க வைத்து அதை ஒரு விபத்தாகக் காட்டி வாகனத்தில் வந்தவரிடம் பணம் பெற்றுப் பின்னர் நடித்த குடும்பத்துக்கும் ஏனையவர்களுக்கும் பணத்தைப் பிரித்துக் கொடுப் பது போன்றதொரு நிலையிலேயே நாடாளுமன்ற வாக்கெடுப்பின்போது தமிழ்த் தலைவர்களும் உள்ளனர்.

இதில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் சுமந்திரன், சாணக்கியன் போன்றோருக்கும் இடையில் எந்த வேறுபாடுகளும் இருக்கப் போவதில்லை. இத்தகைய வாய்ப்புகள் தமிழ்த் தலைவர்களைப் பொறுத்தவரை கூரையைப் பிய்த்துக் கொண்டு கிடக்கின்ற எதிர்பாராத சன்மானங்களே. தமிழ்த் தலைவர்களின் அணிசாராக் கொள்கையின் சூட்சுமமே இதுதான்.





ஒரு தண்டட்டியின் வழியே கிராமத்து உறவுகளையும் சுயநல மனங்களையும் சமரசமற்ற யதார்த்தத்தோடு நகைச் சுவையாகச் சொல்லியிருக்கும் அறிமுக இயக்குநர் ராம் சங்கையா, தமிழ் சினிமாவுக்குத் தரமான வரவு.

சாவு வீடு, ஒப்பாரி வைக்கும் பாட்டிகள், தண்டட்டியைக் கைப்பற்ற நினைக்கும் மகள்கள், அவர்களுக்குள் நடக்கும் அடிதடி, தாய் இறந்த சோகம் ஏதுமின்றி போதையில் தள்ளாடும் மகன், சூழ்நிலை தெரியாமல் மரியாதையை எதிர்பார்க்கும் சொந்தங்கள், சொலவம் சொல்லும் பாட்டிகள் என அசலான ஓர் உலகத்துக்குள், பார்வையாளர்களையும் பாத்திரமாக இழுத்துப் பிடித்து அமர வைத்து விடுகிறது பிசிறில்லாத திரைக்கதை. அதற்கு இயக்குநர் தெரிவு செய்த நடிகர்களின் தேர்ந்த நடிப்பும் ஆழமாகக் கைகொடுத்திருக்கிறது. ஊகிக்க முடியாத அந்த இறுதிக் காட்சி ஆஹா...! சொல்ல வைக்கிறது.

தொடக்கத்தில், பார்வையாளர்களைக் கதைக்குள் இழுக்க கொஞ்சம் சிரமப்பட்டாலும் தண்டட்டி காணாமல் போனதும் எதிர்பார்ப்பு அதிகரித்து விடுகிறது. காவலரைப் போலவே பார்வையாளர்களும் ஒவ்வொருவரையாக ஊகிக்கத் தொடங்குகிறோம். ஆனால், எல்லாம் முடிந்து சடலத்தைத் தூக்கும் நேரத்தில் புதுப் பிரச்சினையைக் கொண்டுவருவது, கதையை நீட்டிக்கும் முயற்சியாக அமைந்து ஏமாற்றத்தைத் தருகிறது.

**பிசிறில்லாத திரைக்கதை. அதற்கு இயக்குநர் தெரிவு செய்த நடிகர்களின் தேர்ந்த நடிப்பும் ஆழமாகக் கைகொடுத்திருக்கிறது. ஊகிக்க முடியாத அந்த இறுதிக் காட்சி ஆஹா...! சொல்ல வைக்கிறது.**



**பாத்திரத் தெரிவு**

விவகாரமான ஊரில் வில்லங்கமாக மாட்டிக்கொண்டு முதலில் முழித்து, பிறகு சமாளிக்கும் தலைமைக் காவலர் பாத்திரத்தில் அருமையாகப் பொருந்தி இருக்கிறார் பசுபதி. அவர் உடல் மொழியும் அனுபவமும் அந்த கதாபாத்திரத்தை முழுமையாகத் தாங்கிப் பிடிக்கிறது.

தங்கப் பொண்ணுவாக ரோகிணி, கிராமத்து வயதான பெண்மணியை கண்முன் நிறுத்துகிறார். வீட்டிலிருந்து எதையாவது எடுத்துச் செல்வதையே நோக்கமாகக் கொண்ட மகள்களை நினைத்து கலங்கும்போது கவனிக்க வைக்கிறார். மகளாக வரும் தீபா சங்கர் கொஞ்சம் மிகை நடிப்பைத் தந்தாலும் செம்மலர் அன்னம், ஜானகி, பூவிதா, போதை மகன் விவேக் பிரசன்னா ஆகியோர் பொருத்தமான நடிப்பை வழங்கியிருக்கின்றனர்.

**இசை, ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

மகேஷ் முத்துசாமியின் ஒளிப்பதிவு கிராமத்து அழகை அதன் மண் மணத்தோடு நமக்கும் கடத்துகிறது. கே.எஸ். சுந்தரமூர்த்தியின் பின்னணி இசை கதைக்குப் பலம் சேர்த்திருக்கிறது. சிவாவின் படத்தொகுப்பு, காட்சிகளைக் கச்சிதமாகச் செதுக்கியிருக்கிறது.

தாய் இறந்து கிடக்க, பேருக்கு கூட கண்ணீர் வடிக்காமல், அனைத்து மகள்களும் தண்டட்டியைக் கைப்பற்றுவதிலேயே குறியாக இருப்பதும் என்னதான் குடிகாரனாக இருந்தாலும் தாய்ப் பாசமின்றி மகன் தள்ளாடியபடி இருப்பதும் கதைக்குச் சுவாரஸ்யம் தந்தாலும் யதார்த்தத்தில் ஒட்டவில்லை. இது போன்ற சின்னச் சின்னக் குறைகள் இருந்தாலும் 'தண்டட்டி'வரவேற்கப்பட வேண்டிய ஒரு தகுந்த படைப்பு.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781